திரு தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல், தீபாவளி, கிருஸ்துமஸ் போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கூடுதலாக லெவி சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்றவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது இருக்கின்ற இருப்பை வைத்து முடிவு செய்யப்படும்.

இலங்கைத் தமிழர்களுக்குப் பொதுமக்களிடமிருந்து நன்கொடை.

62 — (*வினா எண். 8083) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காக அரசு பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலித்த தொகை எவ்வளவு?

(ஆ) அந்தப் பணம் அவர்களுக்காகச் செலவு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காகப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக 31-10-1986 வரை வசூலித்தத் மொத்த தொகை ரூ. 5,24,78,830.75

(ஆ) தற்போது முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் நலனுக்காக 31-10-1986 வரை ரூ. 40,18,735.35 செலவிடப்பட்டுள்ளது.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு சென்ற வருடம் வசூலித்ததையும் முன்பு வசூலித்த தொகையையும் சேர்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். வசூலித்த தொகை ரூ. 5 கோடிக்கு மேல் இருக்கும்போது செலவு இலட்சக்கணக்கில் என்று சொல்கின்றார்கள். இதை இந்த அரசு எப்படிச் செலவழித்திருக்கின்றது? இந்தத் தொகை எந்த முறையிலே செலவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தின் முடிவிற்கேற்ப இந்நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைத்துக் கட்சித்தலைவர்கள் கொண்ட குழுவின் கூட்டத்தினை அமைத்து அதன் முடிவிற்கேற்ப இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்பதைத் தீர்மானம் செய்து அதன்படி செலவிடுவது என்ற குறிப்பை அரசு நடைமுறையில் வைத்துள்ளது.

1987 மார்ச் 5]

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு ஒரு பொருளாதாரத் தடையை விதித்திருப்பதன் காரணமாக, முற்றுகையின் காரணமாக அந்தப் பகுதியிலே வாழ்கின்ற தமிழர்களின் நிலைமை பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கூட இந்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். அதைப்பற்றி, உங்கள் மூலம், அமைச்சர் பெருமகனாரிடமிருந்து தெரிந்துக்கொள்ள விரும்புவது, இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அண்மையில் பிரதமரைச் சந்தித்து ஏதாவது விவாதிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமரை டெல்லியில் கடந்த மாதம் 6-ஆம் தேதி சந்தித்தபோது இதைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய அரசைப்பொறுத்தவரையில் இலங்கை அரசு இராணுவத் தீர்வை முழுமையாக நம்பியிருக்கிறது, 'அரசியல் தீர்வு' என்கின்ற பெயரால் ஏமாற்றுகிறது, இந்த இரட்டை முறையை அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள், Double dealing என்கின்ற வகையில், என்று பிரதமர் அவர்களிடம் தெளிவாக கருத்துச் சொல்லியிருக்கிறோம். நாம் சொன்ன கருத்துக்கு ஏற்ப, அண்மையிலேகூட, இதுவரையிலே சந்திக்காத எதிர்க்கட்சித் தலைவர் சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களே ஜெயவர்த்தனா அவர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பேராபத்து வருமோ என்கின்ற சூழ்நிலையை கருதித்தான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் நேற்றையதினம் அத்தகைய ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிக்காக ஒரு குறிப்பிட்ட நிறத்தில் டிக்கெட் வெளியிட்டிருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டை எல்லாம் சொல்ல முடியாது.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களே நான் சொன்னதைக் குற்றச்சாட்டு என்று சொன்னால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்று சொன்னால் அது குற்றச்சாட்டு இல்லையா? உறுப்பினர் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முறையோடு, கேள்வி கேட்க வேண்டும். கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டு சொல்வது முறையல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஆ. நடராசன்: * *

திரு.ஏ.எஸ். எ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ கட்சி கூடி ஒரு முடிவை எடுக்கிறதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 31-10-1986ல் வசூலான தொகை பற்றி இங்கே சொல்லப்பட்டது. இவ்வளவு தொகை வசூல் ஆகி, கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ வருடம் ஆகிறதே, இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வு குறித்து முந்தையகூட்டத்தில் கூட பேசப்பட்டிருக்கிறதே, இருந்தும் அவர்களின் நல்வாழ்வுச் சாக, பணிகளைச் செய்வதில் இவ்வளவு காலதாமதம் ஏன்? குழுக் கூட்டம் மறுபடியும் எப்போது கூட்டப்படும்? இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக இனிமேலாவது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் நடராசன் அமருங்கள்.

திரு. ஆ. நடராசன்: * *.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வருகிற அகதிகளில் வறுமையுற்றிருக்கின்றவர்களுக்காக அரசு செலவு செய்கிறது. அதை இந்திய அரசு ஈடுகட்டுகிறது. ஆனால் கொஞ்சம் வசதி படைத்தவர்களாக இருந்தால் அவர்களாகவே தங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். இந்த பணத்தை எப்படி செலவு செய்வது, சிறு தொழில்களை ஏற்படுத்திக்கொடுப்பதா என்பது போன்றவற்றிற்கு உறுப்பினரிட மிருந்து எல்லாம் ஆலோசனைகளைப் பெற்று செய்ய வேண்டி யிருப்பதால்தான் காத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.நடராசன் அவர்கள் கூறியதுபோன்று * * அதுகுறித்து உரிய அமைச்சரிடமோ அல்லது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமோ உரிய முறையில் கேட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக இங்கே திடீரென்று * * சொல்வதன் மூலம் அது உண்மையா இல்லையா என்று தெளிவாகப் புரியாத நிலையில் அதற்குப் பதில் சொல்ல முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு அவர் அதை ஏற்கெனவே கொண்டு வந்திருக்க வேண்டும். * * கொடுத்திருக்க வேண்டும். அல்லது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமாவது முன்கூட்டியே சொல்லியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட குற்றச் சாட்டு வருகிறபோது முன்கூட்டியே சொல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் அமைச்சர்கள் பதில் சொல்ல முடியாது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.